RS–1

# முதல் திருப்புத் தேர்வு – 2025

**11 – ஆம் வகுப்பு** **கணினி அறிவியல்**

**மதிப்பெண்கள் : 70** பகுதி – அ **காலம் : 3.00 மணி**

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 15 x 1 = 15

1. ஏ.டி.எம் இயந்திரங்களில், கீழ்க்கண்டவற்றுள் எது பயன்படுத்தப்படுகிறது?
   (அ) தொடுதிரை (ஆ) திரையகம் (இ) ஒலி பெருக்கி (ஈ) அச்சுப்பொறி
2. இவற்றுள் எந்த வாயில் தருக்கதலை கீழி என்று அழைக்கப்படுகிறது?
   அ) AND ஆ) OR இ) NOT ஈ) XNOR
3. கோப்பு மேலாண்மை எவற்றை நிர்வகிக்கிறது ?
   அ) கோப்புகள் ஆ) கோப்புறைகள் இ) அடைவு அமைப்புகள் ஈ) இவை அனைத்தும்
4. சாளரங்களில் ஒரு கோப்பின் மறு பெயரிட பயன்படுத்தப்படும் குறுக்குவழி விசை
   (அ) F2 (ஆ) F4 (இ) F5 (ஈ) F6
5. i = 5 ; இயக்குவதற்கு முன் i: = i -1 இயக்கியதற்கு பின் i–ன் மதிப்பு (அ) 5 (ஆ) 4 (இ) 3 (ஈ) 2
6. மடக்கு மாற்றமிலி உண்மையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை அ) மடக்கின் தொடக்கத்தில்
   ஆ) ஒவ்வொரு சுழற்சியின் தொடக்கத்தில் இ) ஒவ்வொரு தற்சுழற்சியின் முடிவில் ஈ) நெறிமுறையின் தொடக்கத்தில்
7. பின்வரும் கூற்றுகளின் விடையை கண்டறிக?
   ```
   char ch= 'B';
   cout << (int) ch;
   ```
   (அ) B (ஆ) b (இ) 65 (ஈ) 66
8. பல வழி கிளைப் பிரிப்புக் கூற்று: (அ) if (ஆ) if … else (இ) switch (ஈ) for
9. நிரலின் செயலாக்கம் எந்த செயற்கூறிலிருந்து தொடங்கும் ?
   அ) isalpha ( ) ஆ) isdigit ( ) இ) main ( ) ஈ) islower ( )
10. இவற்றுள் எது ஒரே தரவினத்தைச் சேர்ந்த மாறிகளின் திரட்டு மற்றும் அனைத்து உறுப்புகளையும் ஒரே பொதுப் பெயரால் குறிப்பிட இயலும்? அ) int ஆ) float இ) Array ஈ) class
11. தரவுகளையும் செயற்கூறுகளையும் ஒரு பொருள் என்னும் வரையறைக்குள் ஒன்றாகப் பிணைத்து வைக்கும் செயல்நுட்பம் (அ) மரபுரிமம் (ஆ) உறைபொதியாக்கம் (இ) பல்லுருவாக்கம் (ஈ) அருவமாக்கம்
12. ஓர் இனக்குழுவுக்குள் அறிவிக்கப்படும் மாறிகளை தரவு உறுப்புகள் என குறிப்பிடுகின்றோம். செயல்கூறுகளை எவ்வாறு குறிப்பிடுகிறோம்? (அ) தரவு செயற்கூறுகள்
    (ஆ) inline செயற்கூறுகள் (இ) உறுப்பு செயற்கூறுகள் (ஈ) பண்புக்கூறுகள்
13. பின்வருவனவற்றுள் எது செயற்கூறுகளுக்கு வேறுபட்டபொருள் உள்ளதை குறிக்கிறது?
    (அ) செயற்கூறு பணிமிகுப்பு (ஆ) உறுப்பு பணிமிகுப்பு
    (இ) செயற்குறி பணிமிகுப்பு (ஈ) செயற்பாடு பணிமிகுப்பு
14. மரபுரிமம் செயல் முறையில் புதிய இனக்குழு எதிலிருந்து உருவாக்கப்படுகிறது ?
    அ) அடிப்படை இனக்குழு ஆ) அருவமாக்கம் இ) தருவிக்கப்பட்ட இனக்குழு ஈ) செயற்கூறு
15. கீழ்கண்டவற்றில் எது தீங்கிழைக்கும் நிரல்கள் அல்ல ?
    அ) வார்ம்ஸ் ஆ) ட்ரோஜன் இ) ஸ்பைவேர் ஈ) குக்கிகள்

பகுதி–ஆ

***எவையேனும் 6 வினாக்களுக்கு விடையளி, வினா எண் 24 கட்டாயமாக விடையளி*** 6 x 2 = 12

16. நிரல் கவுண்ட்டர் என்றால் என்ன?
17. பல் பணியாக்கம் என்றால் என்ன?
18. ஒரு நெறிமுறை மற்றும் ஒரு செயல்முறையை வேறுபடுத்துக
19. const சிறப்பு சொல் பற்றி எடுத்தக்காட்டுடன் சிறு குறிப்பு எழுதுக.
20. பல்லுருவாக்கம் என்றால் என்ன?
21. அழிப்பியின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதுக
22. செயற்கூறுகள் – வரையறு
23. ஆண்ட்ராய்டு பயன்பாடு விசைப்பலகை என்றால் என்ன?
24. பின்வரும் கட்டுரு வரையறையில் பிழை என்ன?
    ```
    struct employee{ inteno;charename[20];char dept;}
    Employee e1,e2;
    ```



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

பகுதி – இ 6 x 3 =18

எவையேனும் 6 வினாக்களுக்கு விடையளி, வினா எண் 33 கட்டாயமாக விடையளி

25. NAND மற்றும் NOR வாயில்கள் ஏன் பொதுமை வாயில்கள் என்றழைக்கப்படுகின்றன.

26. இயக்க அமைப்பின் முக்கிய சிறப்பியல்புகளை பட்டியலிடுக.

27 ஒரு கோப்புரையை உருவாக்கும் இரண்டு வழி முறைகளை எழுதுக.

28 Case பகுப்பாய்வு என்றால் என்ன ?

29. C++– ல் ஒப்பீட்டு செயற்குறிகள் யாவை ? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுகள் தருக.

30. கட்டக நிரலாக்கத்தின் சில அம்சங்களைப் பற்றி பட்டியலிடுக

31 சரங்களின் அணியைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

32 ஓர் இனக்குழுவை தருவிக்கும் போது, கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை?

33 பின்வரும் எண் தொடரை அச்சிடுவதற்கான நிரல்களை எழுதுக.

1 4 7 10 ...... 40

பகுதி–ஈ

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5 x 5 = 25

34. அ) ஒரு கணிப்பொறியின் அடிப்படை பாகங்களைத் தெளிவான விளக்கப்படத்துடன் விளக்கு

(அல்லது) ஆ) ROM ன் வகைகளைப் பற்றி விளக்கமாக எழுதுக.

35. அ) நுழைவு சோதிப்பு மடக்கு என்றால் என்ன ? ஏதேனும் ஒரு நுழைவு சோதிப்பு மடக்கைபொருத்தமான எடுத்துக்காட்டுடன் விளக்குக. (அல்லது)

ஆ) இயக்க அமைப்பின் செயல் மேலாண்மை நெறிமுறைகளை விளக்குக.

36 அ) பின்வரும் கட்டுரு வரையறையைபயன்படுத்தி இரண்டு தூரங்களை (distance) கூட்டுவதற்கான c++ நிரலை எழுதுக.

```
struct Distance{
int feet;
float inch;
}d1 , d2, sum;
```

(அல்லது)

ஆ) மாறியின் வரையெல்லை விதிமுறைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. அ) பொருள் நோக்கு நிரலாக்கத்தின் நன்மைகள் யாவை ? (அல்லது)

ஆ) கீழ்காணும் நிரலுக்கு வெளியீடு எழுது.

```
#include<iostream>
using namespace std;
class student
{
int rno, marks;
public:
student(int r,int m)
{ cout<<"Constructor "<<endl;
rno=r;
marks=m;
}
void printdet()
{
marks=marks+30;
cout<<"Name: Bharathi"<<endl;
cout<<"Roll no : "<<rno<<"\n";
cout<<"Marks : "<<marks<<endl;
}
};
int main()
{
student s(14,70);
s.printdet();
cout<< "Back to Main";
return 0;}
```

38. அ) செயற்குறி பணிமிகுப்பின் வரம்பெல்லைகள் யாவை ?

(அல்லது) ஆ) கீழ்கண்ட நிரலில் உள்ள பிழைகளை கண்டறிந்து பிழை திருத்தம் செய்க,

```
%include(iostream.h)
#include<conio.h>
class A()
{ public;
int a1,a2:a3;
void getdata[]
{ a1=15; a2=13; a3=13; } }
class B:: public A()
{
PUBLIC
voidfunc()
{ int b1;b2:b3;
A::getdata[];
b1=a1;
b2=a2;
a3=a3;
cout<<b1<<'\t'<<b2<<'t\'<<b3; }
void main()
{ B der;
der1:func(); }
```



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com